
# உடன்பிறப்பே... 96

நீரை.மகேந்திரன்

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த புதுவை சிவம் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

# புதுவை சிவம் புதுவையின் புரட்சிக் குரல்!




புதுச்சேரியில் 2.7.1945 அன்று, தந்தை பெரியாருடன் முத்தமிழறிஞர் கலைஞர் பயணிப்பதற்கான வாய்ப்பு அமைந்தது புதுச்சேரி திராவிடர் கழகத் தொடக்கவிழா. மிகப்பெரிய மாநாடு போலத் திட்டமிடப்பட்டு நடந்த அந்த நிகழ்வில்தான் கலைஞரின் முதல் நாடகம் மேடை ஏறியது. அப்போதுதான் பாவேந்தரும், கலைஞரும் சிலரால் தாக்கப்பட்ட சம்பவமும் நடைபெற்றது. கலைஞரின் வரலாற்றில் மிக முக்கியமான அந்த மாபெரும் நிகழ்வின் வரவேற்புக் குழு தலைவர் பாவேந்தர், செயலாளர் சிவம் என்கிற சிவப்பிரகாசம். சுருக்கமாக புதுவை சிவம்.

புதுவையில் பூத்த புரட்சி மலர்களுள் பாரதிதாசனுடன் இணையாக எண்ணத் தக்க சமூகநீதிக் கவிஞர் சிவப்பிரகாசம். கழகத்தின் கொள்கை மாறா உடன்பிறப்பு.

1908 ஆம் ஆண்டு, அக்டோபர் 13 ஆம் தேதி, புதுச்சேரி, முத்தியால்பேட்டையில் பிறந்தவர் சிவம் . பெற்றோர் சண்முகவேலாயுதம் - விசாலாட்சி அம்மையார். வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்ட, ஓரளவு செல்வாக்கான குடும்பத்தைச் சேர்ந்த சிவம் குடும்பத்தினர், பின்னாட்களில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டனர்.

## சுயமரியாதை இதழியல்

புதுவையில் திண்ணைப் பள்ளியில் சிவம், அவரது சிறு வயதிலேயே அங்கு நிலவிய முற்போக்கு கருத்துகளின் தாக்கம் காரணமாக பகுத்தறிவுக் கொள்கைகளில் ஈர்க்கப்பட்டார். பகுத்தறிவு இதழ்களின் அறிமுகம் கிடைக்க, தன் நண்பர்களுடன் இணைந்து மூடநம்பிக்கைகளுக்கு எதிராகப் பலருடனும் இளமைக் காலத்திலேயே விவாதங்களில் ஈடுபட்டதாக குறிப்புகள் எழுதி இருக்கிறார்.

1926 ஆம் ஆண்டில் புதுவையில் பெரியாரில் பேச்சைக் கேட்டு, சுயமரியாதை இயக்கத்தில் இணைந்து பயணிக்கலானார். அந்தச் சூழலில் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் அறிமுகமும் கிடைக்க, அவரது கவிதைமீது பற்றும் பிடிப்பும் கொண்டு அவருடன் நெருக்கம் கொண்டார்.

1930 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட 'புதுவை முரசு' என்னும் சுயமரியாதை இதழின் பதிப்பாசிரியராகப் பொறுப்பேற்ற சிவம் அவர்கள், அந்த இதழில் காத்திரமான கட்டுரைகள் எழுதத் தொடங்கினார். அதன் காரணமாக, 'புதுவை முரசு' இதழ் மீது வழக்குத் தொடரப்பட்டதுடன், சிவம் அவர்களுக்கு 550 பிராங்க் (பிரெஞ்சு நாணயம்) அபராதமும், மூன்று மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. அந்த நிகழ்வுக்குப் பின்னர், புதுவை சிவம் அவர்களின் புரட்சிகர எழுத்துகளுக்கு கூடுதலாக கவனம் கிடைக்கத் தொடங்கியது. குறிப்பாக பாவேந்தர் அவர்களுடன் நட்பு பலப்பட்டு, அவருடைய கவிதைகளைப் படியெடுக்கும் பணியை ஏற்றார்.

**1936ஆம் ஆண்டுவாக்கில், புதுவை பஞ்சாலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம், அதையொட்டி நடந்த அடக்குமுறைகளால் தொழிலாளர்கள் உயிரிழந்த சம்பவத்தில் சிவம் அவர்களின் எழுத்து அனைவரையும் உசுப்பும் வகையில் இருந்தது.**

தொடர்ச்சியாக மக்கள் பிரச்சினைகளை எழுதிவந்த சிவம் அவர்கள், நெசவுத் தொழிலில் ஏழைகள் படும் துயரம் குறித்து எழுதத் தொடங்கி, தொழிலாளர்களுக்கு எழுச்சி ஊட்டினார். அந்தப் பாடல்களைத் தொகுத்து 'புதுவை நெசவுத் தொழில் -ஏழையர் எழுச்சிப் பாடல்' என்னும் தலைப்பில் வெளியிட்டார். அந்தக் கவிதைத் தொகுப்பு பரபரப்பாக பேசப்பட்டது.

பாரதிதாசனும், சிவமும் புதுவை முரசு வழி, ஏற்படுத்தியிருந்த எழுச்சி, பஞ்சாலைத் தொழிலாளர்கள் மத்தியில் மிக வேகமாகப் பரவியது. 1936 ஆம் ஆண்டுவாக்கில், புதுவை பஞ்சாலை தொழிலாளர் வேலை நிறுத்தம், அதையொட்டி நடந்த அடக்குமுறைகளால் தொழிலாளர்கள் உயிரிழந்த சம்பவத்தில் சிவம் அவர்களின் எழுத்து அனைவரையும் உசுப்பும் வகையில் இருந்தது. 'புதுவை சவானா மில் படுகொலைப் பாட்டு' என்கிற அவரது தொகுப்பு இப்போதும் கவனிக்கத்தக்க அரசியல் ஆவணமாக உள்ளது.

பின்னர் 'புதுவை முரசு' நிறுத்தப்பட்டாலும், 'குடி அரசு', 'நகரதூதன்', 'சண்டமாருதம்', 'முரசொலி' என திராவிட இயக்க இதழ்களில் எழுதத் தொடங்கினார். சுயமரியாதை அரசியல் கவிஞராக தீவிரமாக களத்தில் நின்ற சிவம் அவர்கள், 1944ஆம் ஆண்டு, புதுச்சேரியில் திராவிடர் கழகம் தொடங்கப்பட்டபோது முதல் செயலாளராக பணியாற்றினார்.

## நாடக இலக்கியம்

நாடக இலக்கியத்திலும் ஈடுபாடு கொண்டிருந்த சிவம் அவர்கள், இயல்பாகவே பேரறிஞர் அண்ணா அவர்களுடன் நெருக்கம் கொண்டு பல நாடகங்களும் எழுதியிருக்கிறார். இவர் எழுதிய ரஞ்சிதசுந்தரம், நீதிவர்மன், பூங்கொடி, சிதைந்த வாழ்வு என பல நாடகங்கள் திராவிடர் கழக மேடைகளில் எழுச்சி ஊட்டியிருக்கின்றன.

திராவிட இயக்க எழுத்துகளைப் பதிப்பிப்பதற்காக 'ஞாயிறு நூற்பதிப்பகம்' தொடங்கி திராவிட இயக்கம் சார்ந்த எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட்டார். அறிஞர் அண்ணா எழுதி தமிழகத்தில் தடைசெய்யப்பட்ட நூலான 'ஆரியமாயை' நூலை பிரெஞ்சு இந்தியாவில் துணிச்சலாக வெளியிட்டவர் சிவம்.

கழகம் தொடங்கப்பட்ட காலத்திலேயே, பேரறிஞர் அண்ணாவுடன் தன்னை இணைத்துக் கொண்டு, புதுவையில் கழகத்தைத் தொடங்குவதற்காக பணிகளை மேற்கொண்டவர் சிவம். புதுவையில் கழகம் வளர்வதற்கு காரணமாக இருந்ததுடன் புதுவை நகர்மன்றத் தேர்தலில் வெற்றிபெற்று, கழகத்தின் சார்பில் துணைமேயராகப் பணிபுரிந்தார்.

கழகப் பணிகள் காரணமாக அரசுப் பணிகளுக்கு செல்லாமல், தனியார் பள்ளி ஆசிரியராக பணியாற்றி வந்த அவருக்கு சிறப்பு சேர்க்கும் வகையில், 1969 - 1975ஆம் ஆண்டில், புதுச்சேரிக்கான மாநிலங்களவை உறுப்பினராக கழகத்தின் சார்பில் செயல்படும் வாய்ப்பினை வழங்கினார் தலைவர் கலைஞர். அப்பொழுது நாடாளுமன்றத்தில் மன்னர் மானியத்தை ஒழிப்பதற்குக் கொண்டுவரப்பட்ட 26 வது அரசியல் திருத்த மசோதாவை ஆதரித்துப் பேசிய அவர், அவரது உரையில் பாவேந்தர் பாடலைப் பாடி பரபரப்பூட்டினார். குறிப்பாக நாடாளுமன்றத்தில் பாரதிதாசனுக்கு அஞ்சல்தலை வெளியிடும் கோரிக்கை வைத்தவர் சிவம்.

புதுவை கழகத்தின் முகமாக தொடர்ச்சியாகத் தனது முழக்கத்தை எழுப்பி வந்த சிவம் அவர்கள், 1989-ஆம் ஆண்டு ஆகஸ்டு 31-ஆம் தேதி மறைவுற்றார். புதுவை சிவம் அவர்களின் மறைவுக்குப்பிறகு கழகத்தின் தொடர் முயற்சியால் புதுவை அரசின் கலை,பண்பாட்டுத்துறை சார்பில் அவருடைய நூல்கள் அனைத்தும் தொகுக்கப்பட்டு வெளியிடப்பது. பெரியார் பாசறையில் பயின்று, பேரறிஞர் அண்ணாவின் நட்பு, முத்தமிழறிஞரின் வாழ்வில் திருப்புமுனை தந்த புதுவை சிவம் அவர்களின் பற்று புதுவைக் கழக வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கும்.

**...துடிக்கும்**

## வரவேற்கப்பட வேண்டிய முன்னெடுப்பு!

தந்தை பெரியார் மீது ஒவ்வாமை கொண்ட கூட்டம், எப்போதும் அவருக்கு எதிராகத் தூக்கி வரும் 'முதன்மை ஆயுதம்' தமிழ் குறித்த பெரியாரின் கருத்துகள். 'தமிழ் மொழியைக் காட்டுமிராண்டி மொழி' எனப் பெரியார் கூறிவிட்டார் என்பதுதான் அவர்கள் வைக்கும் முதன்மை வாதம். "பெரியார் ஒரு முழுநேரப் பகுத்தறிவாளர். எதையும் அறிவியல் கண்ணோட்டத்துடன் ஆராய்ந்து, அவற்றைத் தவறு சரியென்று தேர்ந்து, நன்மை தீமைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் மக்கள் அறிவியலாளர். புதுமை விரும்பி. தமிழ் மொழியையும் அவர் அறிவியல் கண்ணோட்டத்துடன்தான் அணுகினார்" என்று பாவலரேறு பெருஞ்சித்திரனார் பெரியாரின் நிலைப்பாட்டிற்குத் தெளிவான விளக்கம் தந்திருக்கிறார்.

எனினும் அவதூறு நின்றபாடில்லை. ஆனாலும், பெரியாரின் கருத்து எத்தனை தொலைநோக்கானது என்பதைச் சிந்திக்க வேண்டும். சென்னை பல்கலைக்கழகத்தின் கோட்பாட்டு இயற்பியல் துறை சார்பில், 'பயனுறு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் அண்மைப்போக்கு' என்ற தலைப்பில், சமீபத்தில் கருத்தரங்கம் நடைபெற்றது. அதில், ஆய்வாளர்கள் வழங்கிய ஆய்வுக்கட்டுரைகளை கோட்பாட்டு இயற்பியல் துறைத் தலைவர் ரீட்டா ஜான் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். இதை, இஸ்ரோ விஞ்ஞானி சிவதாணுபிள்ளை சில தினங்களுக்கு முன்பு வெளியிட்டார்.

அந்த நிகழ்ச்சியில் பேசிய ரீட்டா ஜான், "தமிழ் தொன்மையான மொழி எனப் பெருமை பேசுவதால் பயனில்லை. வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்ப யுகத்துக்கு ஏற்ப, புதிய கலைச்சொற்களை உருவாக்க வேண்டும். அந்த வகையில், ஆங்கிலத்தில் வழங்கப்பட்ட கட்டுரைகளில் உள்ள, துறைசார்ந்த பன்மொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை வல்லுநர்களுடன் இணைந்து உருவாக்கினோம்" என்று கூறியுள்ளார்.

இதை, உயர்கல்வி நிறுவன நூலகங்களுக்கு அனுப்பவிருப்ப தாகவும், 'இயற்பியல் துறைக்கான கலைச்சொற்கள் இல்லை என்ற குறை, இதனால் நீங்கும்' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இத்தகைய அறிவியல் மாற்றங்களை, தமிழ் மொழி காண வேண்டுமென்பதே பெரியாரின் கண்ணோட்டம். காலமும், கல்வியும் அதைச் செய்கிறது!

## ஃப்ளாஷ்பேக்



### மாணவர்களுக்குச் சொல்லித் தருவேன்!


ப.குமாரசாமி

திராவிட இயக்கக் கொள்கைகளின் மீது நான் பற்றுகொண்டு, ஆசிரியர் பணியாற்றி வந்தேன். முடிந்த அளவுக்கு இயக்கத்தின் கொள்கைகளை, மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதைக் கடமையாகவே கருதி மேற்கொண்டு வந்தேன். அதைத் தொடர்ந்து 2014-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்திக்க கோபாலபுரம் இல்லம் சென்றேன், அவருக்குக் காய்ச்சலாக இருந்தபோதிலும், அவரைச் சந்திக்க வாய்ப்பு வழங்கி, படம் எடுத்துக்கொள்ளவும் அனுமதி வழங்கினார். உடன் முனைவர் கருவூர் கன்னல், முனைவர் கடவூர் மணிமாறன் ஆகியோர் இருந்தனர்.

**- ப.குமாரசாமி, கரூர் மாவட்டத் தலைவர், திராவிடர் கழகம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### கறுப்புப் புறாக்கள்!

1977-ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் தமிழ்நாடு வந்த முன்னாள் பிரதமர் இந்திராகாந்திக்கு எதிராக, கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தை அறிவித்தது கழகம். 29-ஆம் தேதி காலையில், அவர் விமானத்தில் வந்து இறங்கும் நேரத்தில் கறுப்புக் கொடிகளுடன் கழகத்தினர் திரண்டனர். காவல்துறையினர் அவர்களை அடித்து விரட்டிய நிலையில், கழகத்தின் மற்றொரு குழுவினர், புறாக்களுக்கு கறுப்பு வண்ணம் பூசி விமானம் இறங்கும் நேரத்தில், வானத்தில் பறக்கவிட்டு எதிர்ப்பினைப் பதிவு செய்தனர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

743

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.